


| 01.02.2024 | **05. குழியிலிருந்து தூக்கப்பட்டு, நரகம் செல்வதா?** |
|---|---|



நமது உள்ளம் நடுங்கும் விதமாய், இயேசு உரைத்த வார்த்தைகளைக் கவனியுங்கள்.... "ஒருவனை உங்கள் மார்க்கத்தானாகும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறீர்கள்! பின்பு.... அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள்!!" (மத்.23:15). இயேசுவின் இந்த வார்த்தைகள் என்னில் நிரந்தரமான "தெய்வ பயத்தை" தந்துள்ளது!!

இன்றைய சபைகளின் சுவிசேஷ பிரகடன தரம், இயேசு சுட்டிக் காண்பித்த எல்லையிலிருந்து வெகுவாய் சீரழிந்து தாழ்ந்துபோய் கிடக்கிறது! சபைகள் போகிற போங்கினைப் பாருங்கள்.... "உலகமும் அதன் மாசுகளும் அன்றாட நடைமுறை வாழ்விற்கு தேவையே!" எனக்கூறும் கதியில் சரிவடைந்துள்ளது! நம் சுவிசேஷ பாங்கு "சமூக சமரசம்" என தேய்ந்து "ஆவிக்குரிய" ஒப்பற்ற நிலையை இழந்து காணப்படுகிறதே! தனி நபர் தொடங்கி, சபை மட்டும் ஆராதனையின் புனிதம், அவர்களின் இஷ்டத்திற்கு பிய்த்து – நார்நாராகிப் போய் விட்டது! ஒவ்வொரு கிறிஸ்தவனும், கிறிஸ்தவ சபைகளும் மனந்திரும்ப வேண்டிய அவசர காலமிது!

.

– ரத்னம்